[1972 மார்ச் 24

திரு ஜே. ஜேம்ஸ் : அப்ரன்டிஸ் ஆசிரியர்கள் அப்ரன்டீஸாக இருக்கும் பொழுது ஓவர் எஜ் ஆகிவிடுகிறது. அந்தக் காரணத்தினால் அவர்கள் நிரந்தரமாக வேலை பார்க்க வசதியில்லை. எனவே ஓவர் எஜ் ஆனால் அதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப் பிரச்சினையில்லை. அந்தப் பிரச்னை இருக்குமானால் தனியாக ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : வேலையில்லாத ஆசிரியர்களுக்கு இடைக்காலத்தில் அப்ரன்டிஸ்ஷிப் கொடுக்கப்பட்டாலும், வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கு அன் எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் அல்லது சப்ஸிடி ஏதாவது கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முழு வேலை கிடைக்கிற வரையில் தொழில் பழகு ஆசிரியர்களாக இடைக்காலத்திலே நியமிக்கப்படுகின்ற வகையிலேதான் 6,500 இடங்கள் உண்டாக்கப்பட்டன. அந்த வகையிலேதான் இப்பொழுது வேலைவாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள்.

***674. வினா:—திரு எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாடு முழுவதும் பணிபுரியும் பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள் தாங்கள் பெறும் நாள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமெனக் கோரி தமிழ் நாடு அரசு தலைமைச் செயலகம் முன்னால் 7–7–71 முதல் 11–7–71 வரை அடையாள உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருந்தார்களா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(The hon. Member Thiru M. Muthiah rose.)

MR. SPEAKER : It is a most out-dated question.

***675. வினா:—திரு இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதிநேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

(இ) அவர்களை முழு நேர வேலையில் அமர்த்தி முழுச் சம்பளம் அளிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) செங்கை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.